**காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனி - 2021**

------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனியின் (''கம்பனி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, கம்பனியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனி செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்காமை

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 23.17 ஆம் பிரிவிற்கு இணங்க ஒப்பந்த வருமானம் மற்றும் செலவினம் அறிக்கையிடப்படும் காலப்பகுதிக்குரிய ஒப்பந்தப் பணிகளின் பூர்த்திக் கட்டத்திற்கமைய இனங்காணப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் ஒப்பந்த வருமானத்தினை இனங்காணும் கொள்கையின் அடிப்படையில் பூர்த்திக் கட்டத்தின் அடிப்படையில் பட்டியல்களை | கணக்கீட்டு நியமம் 23.17 இன் பிரகாரம் சேவை வழங்குநரால் சான்றுபடுத்தப்பட்ட பணிகள் மற்றும் 2021-12-31 ஆந் திகதியில் உள்ளபடியான எமது பொறியியலாளரினால் குறித்த வருடத்தில் சான்றுபடுத்தப்பட்ட பணியின் அளவு கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அதன் | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் பிரகாரம், ஒருங்கிணைந்த அளவீடுகளின் அடிப்படையில் வேசை வழங்குநரின் இணக்கப்பாட்டுடன் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பித்த திகதிகள் தொடர்பில் கருத்திற்கொள்ளாது சேவை பெறுநரால் பணிகள் சான்றுபடுத்திய திகதியை அடிப்படையாக கொண்டு இனங்காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் கம்பனியின் ஒப்பந்த வருமானமான ரூபா 86.91 மில்லியன் தொகையின் சரியானதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.<br><br>இதற்கமைவாக மீளாய்வாண்டினுள் கம்பனியால் சேவை வழங்குநர் நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் பெறுமதி 76.27 மில்லியனான போதிலும், அந்த நிறுவனங்களிலிருந்து கிடைத்த தொகை ரூபா 48.59 மில்லியனாக காணப்பட்டதுடன், பணிகள் உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத மீதி ரூபா 27.68 மில்லியன் ஆகும். | பிரகாரம் நிறுவனத்தினால் ரூபா 86.10 மில்லியனான வருமானம் இனங்காணப்பட்டுள்ளது. | |
| (ஆ) | விற்பனைக்கான இருப்புகளை கணக்கு வைத்தல் தொடர்பில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிதி அறிக்கையிடல் நியமத்தின் 13.4 ஆம் பந்திக்கமைய மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான கணக்கீட்டு குறிப்பு இலக்கம் 2.2.1 இன் பிரகாரம், இருப்பு கிரயம் மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகியவற்றின் குறைவான பெறுமதியில் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியா கம்பனிக்கு சொந்தமான ரூபா 19.24 மில்லியன் கிரயமான சீமெந்துக் கற்கண், முன்பூர்த்தி கொன்கிறீட் உற்பத்திகள் போன்ற முடிவுப் பொருட்கள் இருப்பு பெறுமதியிடும் போது தேறிய தேறக்கூடிய பெறுமதி கருத்திற்கொள்ளப்படாது கிரயம் குறைத்துக் கணிப்பிடப்பட்டிருந்தது. | அனைத்து இருப்புகளும் எடையிடப்பட்ட சராசரி செலவு முறையின் (WAC) கீழ் பராமரிக்கப்படுகின்றன மற்றும் தேறிய தேறக்கூடிய பெறுமதி மற்றும் கிரயத்தின அடிப்படையில் சரக்குகளை கணக்கிடும் போது தேறிய தேறக்கூடிய பெறுமதியை விட கியரம் எப்போதும் குறைவாக இருப்பதால் சரக்குகள் கிரயத்தில் கணக்கிடப்படுகின்றன. | நியமத்தின் ஏற்பாடுகளுக்கமைய தேறிய தேறக்கூடிய பெறுமதி கணிப்பிடப்படடு கிரயத்துடன் ஒப்பிடப்பட்டு குறைவான பெறுமதியில் கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | 2012-2017 காலப்பகுதியினுள் கம்பனியிால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களிடையே பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த 5 ஒப்பந்தங்களுக்குரிய மற்றும் இடைநடுவில் நிறுத்தப்பட்ட 05 ஒப்பந்தங்கள் உள்ளடங்களாக 10 ஒப்பந்தங்களுக்கு உரியதாக செலவிடப்பட்ட ரூபா 32.76 மில்லியன் புத்துருவாகும் பணிகளின் கீழ் | 2012-2017 ஆம் காலப்பகுதியினுள் பிரச்சிக்குரிய வேலைத்தளமாக இனங்காணப்பட்ட பின்வரும் ஒப்பந்தங்களின் பிரச்சினைகள் தீரும் வரை நடைமுறை வேலையாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்படும் சொத்துக்களின் நிலவுகை தொடர்பில் நிச்சயமற்ற நிலையொன்று காணப்பட்டால் அதற்கு போதிய ஒதுக்கங்கள் அல்லது பதிவழித்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த செலவினங்களுக்கு உரிய பட்டியல்கள் குறித்த சேவை வழங்குநர்களுக்கு 2012-2017 ஆம் ஆண்டுகளினுள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் அவை சான்றுபடுத்தப்பட்டிராத காரணத்தால் வருமானமாக இனங்காண முடியாது காணப்பட்டது. எவ்வாறான போதிலும், இந்த புத்துருவாகும் பணிகளை வருமானமாக மாற்றுதல் தொடர்பில் நிச்சயமற்ற நிலையொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்ட போதிலும், அதன் நிலவுகை தொடர்பில் மீளாய்வு செய்து நட்டங்களாக இனங்காண அல்லது பொருத்தமானவாறு அழிவு நட்ட ஒதுக்கீடு மேற்கொள்வதற்கு கம்பனியால் ஆண்டினுள்ளேயும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்காக கோரிக்கை கடிதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன்,மேற்படி வேலைத்தளத்தின் பிரச்சினைகளை தீர்ப்பனவு செய்த பின்னர் 2022 ஆம் ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கிற்கு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்த செயற்திட்டங்களின் பட்டியல்கள் சேவை வழங்குநரால் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | என்பது. |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 28.24 பந்திக்கமைய சேவையின் பிரதிபலன்களை கணிப்பீடு செய்யும் போது உண்மையான நலன் அல்லது நட்டத்தினை (Actuarial gain or loss) இனங்காண்பதற்கு மதிப்பீடொன்று (Actuarial valuation) மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்பனி அதற்கமைவாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது ஓய்வூதிய உண்மை நலன் மற்றும் நட்டங்கள் இனங்காணப்பட்டு அதற்கமைய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதி அறிக்கையிடல் நியமத்தின் அறிவுரைக்கமைய ஊழிய நலன் கணிப்பிடப்பட வேண்டும். |
| (உ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்காக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் 17.2 பந்திக்கமைய, சொத்துக்களை பயன்பாட்டிற்கு எடுத்த திகதி முதல் பெறுமானத் தேய்விடல் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன், சொத்துக்களை அகற்றும் திகதி முதல் பெறுமானத் தேய்விடல் நிறுத்தப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், கம்பனி அதற்கு முரணாக சொத்துக்களை கொள்வனவு செய்த ஆண்டுக்காக பெறுமானத் தேய்விடலும், சொத்துக்களை அகற்றும் வருடத்தில் முழுமையான ஆண்டுக்கும் பெறுமானத் தேய்விடாதிருத்தல் எனும் கொள்கையை பேணியிருந்தது. | இந்த நிறுவனத்தின் சொத்துக்களைத் தேய்மானம் செய்வதற்குப் பின்பற்றப்படும் கணக்கியல் கொள்கைகளின்படி, சொத்து வாங்கிய ஆண்டில் முழு ஆண்டுக்கும் தேய்மானம் செய்யப்படுகிறது மற்றும் சொத்தை அகற்றும் ஆண்டில் முழு ஆண்டுக்கும் தேய்மானம் மேற்கொள்ளப்படுவது இல்லை. | நிதி அறிக்கையிடல் நியமத்திற்கமைய சொத்துக்களை பெறுமானத் தேய்விடும் கொள்கை பேணப்பட வேண்டும் என்பது. |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | உரிய கொள்கையுடனான தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுக்கான கணக்கீட்டு கொள்கை இலக்கம் 2.2.2 இன் பிரகாரம் கணக்கு ஆண்டின் இறுதியில் திட்டவட்டமாக இனங்காணப்பட்ட கடன்பட்டோருக்காக மாத்திரம் ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 13,791,136 ஆன கடன்பட்டோரிடம் இருந்தான கடன் மீதிகளுக்காக எதுவித ஐயக்கடன் ஒதுக்கமும் மேற்கொள்ளபட்டிருக்கவில்லை. | எம்மால் திட்டவட்டமாக இனங்காணப்பட்ட கடன்பட்டோருக்காக மாத்திரம் ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்படும். 2-5 வருடங்களுக்கு இடைப்பட்ட கடன்பட்டோரிடமிருந்து கடனை சேகரிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவர்களிடமிருந்து அந்தத் தொகை எமக்கு கிடைப்பதற்கு நிமித்தமாக உள்ளது. மேலும் இந்தப் பணத்தின் ஒரு தொகுதி 2022 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு கிடைத்துள்ளது. | அனைத்து கடன்பட்டோரும் திட்டவட்டமாக இணங்காணப்பட்டு ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அவிஸ்ஸாவெல பிலிப் குணவர்த்தன விளையாட்டுத் திடலுக்கு அரங்கமொன்றினை நிர்மாணிக்கும் பணியில் கம்பனியால் 2011 ஆம் ஆண்டின் போது உப குத்தகையாளர் ஒருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 2.3 மில்லியனான செலவினம் பெற வேண்டிய முன்னைய முற்பணமாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் 10 வருட காலமாக நிதிக்கூற்றுக்களின் நடைமுறைப் பொறுப்பகள் அந்த அளவினால் மிகைக் கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. | கம்பனியால் 2011 ஆம் ஆண்டின் போது உப ஒப்பந்ததாரருக்கு அவ்வப்போது செலுத்தப்பட்ட ரூபா 2.3 மில்லியனான தொகை சேவை வழங்குநர் நிறுவனத்தின் பொறியியளாலரினால் சான்றுபடுத்தப்பட்ட பட்டியல்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால், குறித்த தொகை பெற வேண்டிய அசையும் முற்பணமாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் அந்த பணத்தை அறவிடுவதற்கு அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | நிதி அறிக்கையிடல் நியமத்திற்கமைய ஒப்பந்ததார்களுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை செலுத்துதல் ஒப்பந்தச் செலவினமாக இனங்காணப்பட வேண்டும் என்பது. |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூபா.20,848,972 ஆன பெறவேண்டிய சுழற்சி முற்பண மீதியினுள் 5 வருடங்களுக்கு மேற்பட்ட ஆண்டுக் காலப்பகுதியினுள் நிலுவையாக | இந்த ஒப்பந்த பட்டியல்களை செலுத்தாது நிறுத்தியதன் அடிப்படையில் ரூபா.13,940,949 ஆன சுழற்சி முற்பணத் தொகை தீர்ப்பதற்கு முடியாதுள்ளதுடன் | பட்டியல்களை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட மீதி ரூபா.13,940,949 ஆக காணப்பட்டதுடன், 2 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்கு உரிய அறவிடப்பட வேுண்டிய முற்பண மீதி ரூபா.4,494,247 ஆக காணப்பட்டது. | ரூபா.6,608,022 ஆன ஒப்பந்தங்கள் நிறைவடைந்தவாறு காணப்படுவதுடன் பட்டியல்களை சமர்ப்பித்த பின்னர் தீர்க்கப்படும். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா.75,163,586 ஆன பெறவேண்டிய பிடி காசு மீதியினுள் 2 முதல் 5 வருட காலத்திற்குரியதாக அறவிடப்படாது காணப்படும் மீதி ரூபா 28,891,521 மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படும் மீதி ரூபா.40,193,638 ஆக காணப்பட்டது. | இந்த பெறவேண்டிய ரூபா.75,163,586 ஆன பிடி காசில் ரூபா.8.4 மில்லியனான தொகைக்கு உரிய ஒப்பந்தங்கள் இந்த வருடத்தில் நிறைவு செய்யப்பட்டவாறு உள்ளதுடன் எஞ்சிய பணத்தை பெற்றுக்கொள்வதற்குரிய கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் எமது அமைச்சின் ஊடாகவும் இந்த பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தப் பணி நிறைவு செய்யப்பட்டு உரிய காலப்பகுதி நிறைவு செய்யப்பட்ட பின்னர் பிடிகாசினை துரிதமாக தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கம்பனியின் பணிகளுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் 4 நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைகளிலிருந்து நீங்கியிருந்த போதிலும், அதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 282,616 ஆன வைப்புத் தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கைகளிலிருந்து நீங்கிய பின்னர் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து வைப்புத் தொகையை துரிதமாக மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான வியாபார மற்றும் நிர்மாணக் கடன்பட்டோரிடமிருந்து கம்பனிக்கு அறவிடப்படவேண்டிய தொகையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 89,769,631 ஆன தொகையில் ரூபா 16,723,416 தொகை 1 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாகவும், ரூபா 10,102,634 தொகை 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவிடப்படாது காணப்பட்டது. மேலும், வியாபாரக் கடன் பட்டோரின் 58 சதவீதமானோர் தாய் கூட்டுத்தாபனமான இலங்கை காணிகள் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திலிருந்து பெற வேண்டியதாக காணப்பட்டது. | இந்த ரூபா.89,809,501 ஆன பணத்தில் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 31.49 மில்லியன் தொகை இதுவரையிலும் சேகரிக்கப்பட்டுள்ளது. | அறவிடவேண்டிய பணத்தை துரிதமாக தீர்ப்பனவு செய்ய வேலைத்திட்டமொன்றை தயாரித்து அதனை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூபா.57,184,360 ஆன ஒப்பந்தங்களிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட காசு மீதியினுள் குறித்த நிறுத்தி வைத்தல் காலப்பகுதியை விஞ்சியிருந்த போதிலும் தீர்ப்பனவு செய்யப்படாத மீதி ரூபா 33,216,915 ஆக காணப்பட்டது. | இந்த ரூபா.57,184,360 ஆன செலுத்த வேண்டிய பிடிகாசு எமது சேவை வழங்குநர்களால் எமக்கு விடுவிக்கப்பட்ட பின்னர் செலுத்துவதங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், அந்த பணம் இதுவரையிலும் கோரப்பட்டுள்ளது. | நிறுத்தி வைத்தல்கள் மற்றும் அந்த கொடுப்பனவுகள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படல் தொடர்பில் செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாடொன்றினை அறிமுகப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக வியாபார மற்றும் ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதி ரூபா.107,242,663 ஆக இருந்ததுடன் அவற்றுள் 2 முதல் 5 வருட காலத்திற்குட்பட்ட தீர்ப்பனவு செய்யப்படாத மீதி ரூபா.44,765,096 மற்றும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் கொடுத்தோர் மீதி ரூபா.15,812,340 ஆகவும் காணப்பட்டது.. | கடன் கொடுத்தோர் மீதியில் ரூபா 170.2 மில்லியன் தொகை செயற்திட்டம் ஒப்படைக்கப்பட்டமையின் அடிப்படையில் விடுவிக்கப்படும். அதற்கு மேலதிகமாக ரூபா 2.5 மில்லியன் 2022 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய ரூபா 17.4 மில்லியனான ஒப்பந்த கடன் பட்டோர் மீதியில் ரூபா 8.11 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், துணைக் கம்பனிகளால் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டியதாக ரூபா 29.58 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுமதி துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களினுள் ரூபா 30.93 மில்லியன் மாத்திரம் செலுத்த வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால், அவற்றுக்கு இடையே ரூபா 1.35 மீல்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புகளுடன் இணங்குவதுடன், ரூபா 1.5 மில்லியனான பட்டியல்கள் பொறியியலாளரால் சான்றுபடுத்தப்பட்டு கிடைக்கப்பெற்ற பின்னர் இந்த பட்டியல்களை கணக்கு வைத்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் மீதிகள் தொடர்பில் மீளாய்வு செய்து உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக சீமெந்துக் கற்களை (block) விற்பனை செய்வதற்காக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திலிருந்து 293 பட்டியல்களுக்காக ரூபா 20,292,346 தொகை கம்பனிக்கு அறவிடப்பட வேண்டியதாக கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட போதிலும், கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்படாத தகவல்களுக்கமைய கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை 142 பற்றுச்சீட்டுகளுக்கு உரிய ரூபா 10,027,598 மாத்திரம் என குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தால், அதனிடையே ரூபா 10,264,749 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அந்த வேறுபாட்டுக்கு காரணமாக அமைந்த விடயங்கள் கம்பனியால் இனங்காணப்பட்டு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புகளுடன் இணங்குவதுடன், தாய்க் கம்பனியுடன் இது தொடர்பில் பல்வேறு கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், குறித்த வேலைத்தளங்களின் பொறியியலாளர்கள் உரிய GRN களை கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பிக்கவுள்ளனர். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் மீதிகள் தொடர்பில் மீளாய்வு செய்து உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |
| (இ) | கம்பனியின் உத்தியோகத்தர் ஒருவர் 2018 ஆம் ஆண்டில் மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களுக்காக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா.647,992 ஆன தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கு இணங்கியுள்ளதுடன் கம்பனியின் நிதி நிலைமை நல்ல நிலைமைக்கு வந்ததுடன் ரூபா.647,992 ஆன தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஈ) | கம்பனியின் தாய்க் கம்பனியான இலங்கை காணிகள் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய கடல் மணலை பக்கற்றில் அடைக்கும் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக ரூபா 200 மில்லியனான கடன் தொகையொன்று 2019 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த கடன் தொகையும் உள்ளடங்களாக கம்பனியால் ரூபா 382.50 மில்லியன் (நேரடிச் செலவினம் மாத்திரம்) செலவிடப்பட்டு தாய்க் கம்பனிக்கு சொந்தமான கெரவலப்பிட்டிய பிரதேசத்தின் காணியொன்றில் எதுவித செயற்திட்ட | கம்பனிக்கு சொந்தமான கெரவலப்பிட்டிய பிரதேசத்தின் காணியொன்றில் நீண்ட கால வணிக முதலீடாக கடல் மணல் பக்கற்றில் அடைக்கும் மற்றும் மணல் கழுவும் செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், எந்தவொரு செயற்திட்டத்தையும் மதிப்பீடு செய்யாது மற்றும் சாத்தியவளக் கற்கையொன்றை மேற்கொள்ளாது மணல் பக்கற்றில் அடைக்கும் செயற்திட்டம் | புதிய செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியவளக் கங்கையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது மற்றும் உரிய பணிக்காக கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினமும் தாய்க் கம்பனியிலிருந்து தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

மதிப்பீடோ அல்லது சாத்தியவளக் கற்றையொன்றினையோ மேற்கொள்ளாது 2019 நவம்பர் 04 ஆந் திகதி இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த செயற்திட்டம் தொடர்ச்சியான நட்டமீட்டுவதாக குறிப்பிட்டு தாய்க் கம்பனியான இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் 2021 யூலை 30 ஆந் திகதிய மேவுகை அங்கீகாரத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. 2021 யூன் 02 ஆந் திகதி தாய்க் கம்பனியால் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட காணி மற்றும் கட்டிடம் தனியார் நிறுவனமொன்றுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன், 2021 யூலை 14 ஆந் திகதி அது எழுத்துமூலம் கையளிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே, 2021 நவம்பர் 19 ஆந் திகதி இந்த சொத்துக்கள் ரூபா 326.30 மில்லியனாக அரச மதிப்பீட்டாளரினால் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த பெறுமதிக்கு கட்டிடம் கூட்டுத்தாபனத்தினால் சுவீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய கம்பனியின் புத்தகங்களின் புத்துருவாகும் பணிகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 331.02 மில்லியன் தொகையில் ரூபா 326.30 மில்லியன் கழிக்கப்பட்டு, வேறுபாடான ரூபா 4.72 மில்லியன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்றில் புத்துருவாகும் பணியாக காண்பிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டு பெறுமதி மற்றும் புத்தகப் பெறுமதி ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாட்டினை வருமானக் கூற்றுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2022 திசெம்பர் 08 ஆந் திகதி கம்பனியின் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய கம்பனியால் தாய்க் கம்பனியான இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த இடைநிறுத்தப்பட்டதுடன், மணல் கழுவும் செயற்திட்டம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய மணல் பக்கற்றில் அடைப்பதற்காக பணன்படுத்தப்பட்ட கட்டித்தில் பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தால் கூட்டுத்தாபனத்திற்கு சுவீகரிக்கப்பட்டு, குறித்த காணி தனியார் நிறுவனமொன்றுக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அதற்கமைய செயற்திட்டத்திற்காக கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 382.50 மில்லியனான செலவினம் கூட்டுத்தாபனத்தினால் பதிவழிக்கப்படவுள்ளதுடன், அந்த செலவினம் விளைவற்ற செலவினமாவது தடுக்கப்பட்டது.

வேண்டியதாக காணப்பட்ட ரூபா 467.53 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய கணக்குகள் இந்த பெறுமதியில் ஈடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், அந்த செயற்திட்டத்திற்காக கம்பனிக்கு வழங்கப்படும் கடன் தொகையில் ரூபா 141.23 மில்லியன் தொடர்ந்தும் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது.

இதற்கமைய, தாய் கம்பனியால் முறையற்ற விதத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் காரணமாக கம்பனியின் சுயாதீனத்துவம், நிதி மற்றும் செயற்பாட்டு செயலாற்றலுக்கு பாதகமான தாக்கங்கள் ஏற்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

**1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 ஜூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றிக்கை<br><br>2.2.3 (ஆ) ஆம் பிரிவு | கம்பனியால் தமது செயற்பாட்டு நடவடிக்கைகளை பேணுவதற்காக நிதி செயல்நடைமுறைக் கோவையொன்று மற்றும் நிர்வாக பிரமாணக் கோவையொன்று தயாரித்து, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக திறைசேரியின் மற்றும் பொது நிர்வாக அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது, அந்த செயல்நடைமுறைக்கமைய கம்பனியின் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கம்பனி தயாரித்துஈ பணிப்பாளரின் அங்கீகாரம் பெற்றுள்ள நிதி செயல்வழிக் கோவை மற்றும் நிர்வாக பிரமாணக் கோவைக்காக திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | நிதி செயல்வழிக் கோவை மற்றும் நிர்வாக பிரமாணக் கோவைக்காக திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம், மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கம்பனியின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 0.33 மில்லியனாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 91.02 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய மீளாய்வாண்டுக்காக நிதிப் பெறுபேறுகளில் ரூபா 91.35 மில்லியனான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக ஒப்பந்த வருமானம் மற்றும் சீமெந்து மற்றும கற்கள் மற்றும் அச்சுக் கற்களின் விற்பனை வருமானம் ரூபா 43.4

மில்லியனால் அதிகரித்தமை மற்றும் ஒப்பந்தப் பிரிவின் விற்பனைக் கிரயம் ரூபா 20.46 மில்லியனால் குறைவடைந்தமை மற்றும் நிதிக் கிரயத்தினுள் உள்ள வட்டிச் செலவினம் ரூபா 24.3 மில்லியனால் குறைவடைந்தமை மீளாய்வாண்டின் நிதிப் பெறுபேறுகளின் வளர்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

### (அ) கணக்கீட்டு விகிதங்கள்

மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டுக்கு உரியதாக கம்பனியின் முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் பின்வருமாறு ஆகும்.

| | **2021** | **2020** |
|---|---|---|
| கடன் மூலதன விகிதம் | (15.76) | (26.60) |
| நீண்ட காலக் கடன் மூலதன விகிதம் | 1.19 | 1.11 |
| மொத்த இலாப விகிதம் (சதவீதம்) | 30.83 | (7.65) |
| தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 0.08 | (48.45) |
| நடைமுறை விகிதம் | 1.35 | 0.71 |
| விரைவு விகிதம் | 1.00 | 0.56 |
| கடன் பட்டோர் புரள்வு விகிதம் | 2 | 1.58 |
| கடன் சேகரிப்புக் காலம் | 183 | 231 |

(i) ஆண்டுக்கான மொத்த இலாபம் ரூபா 56.9 மில்லியன் வரை அதிகரித்தமையின் அடிப்படையில் கம்பனியின் மொத்த இலாப விகிதம் 7.65 சதவீதத்திலிருந்து 30.83 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

(ii) முன்னைய வருடத்தில் முறையே 0.71 மற்றும் 0.56 ஆக காணப்பட்ட கம்பனியின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் முறையே 1.35 சதவீதம் மற்றும் 1.00 சதவீதம் வரையிலும் அதிகரித்திருந்தது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கம்பனியின் மொத்த கடன் பட்டோர் ரூபா 107.24 மிலியனாக காணப்பட்டதுடன், கடந்த வருடத்தில் அந்த பெறுமதி ரூபா 328.78 மில்லியனானமையால், மீளாய்வாண்டின் போது கடன் கொடுத்தோரில் 67.3 சதவீத அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்ததுடன், அதனுள் உள்ளடங்கும் வியாபார கடன் கொடுத்தோர் ரூபா 53.54 மில்லியனால் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 44.8 சதவீத வளர்ச்சி ஆகும். தாய் கம்பனிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை ஈடு செய்வதற்கான காரணமாக அமைந்திருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது கடன் மூலதன வீகிதம் 15.76 மறை பெறுமதியாக காணப்பட்டதுடன், கம்பனியின் நீண்ட கால கடன் மூலதன விகிதம் 1.35 வீதமான பெறுமதியை கொண்டிருந்தமையால், கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலை தொடர்பில் நிச்சயமற்ற நிலையொன்று வெளிப்படுத்தப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் கீழ் செயற்படும் 07 தொழிற்சாலைகளில் 05 தொழிற்சாலைகளின் மற்றும் வேலைத்தளத்தின் ஒட்டுமொத்த நிதிப் பெறுபேறு ரூபா 9.98 மில்லியனான நட்டமாக காணப்பட்டது. கம்பனியின் கிரய முகாமைத்துவத்திலான நலிவுகள் மற்றும் விற்பனை மூலோபாயங்கள் பயன்படுத்தப்படாமை இதற்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. கம்பனியால் மீளாய்வாண்டுக்காக விற்பனை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கமைய விற்பனையை அதிகரிப்பதற்கு மற்றும் சந்தையினை வியாபிப்பதற்கு தவறியிருந்தது. விபரங்கள் பின்வருமாறு. | அரசின் சுற்றறிக்கை மற்றும் பெறுகை நடைமுறைளினூடாகவும் அரசினால் விதிக்கப்படும் வரிகளினாலும் எனது உற்பத்திகளின் கிரயம் அதிகரித்தமையின் அடிப்படையில் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுடன் போட்டியிடுவதற்கு மிகவும் சிரமமானதாக உள்ளது. | களத்தில் உள்ள போட்டி அடிப்படையிலான கிரயம் மற்றும் சந்தை மூலோபாயங்களை பயன்படுத்தி சந்தையில் தங்கியிருப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | தொழிற்சாலையின் பெயர் | இலாபம்/(நட்டம்) ரூபா மில்லியன் 2021 | 2020 |
|---|---|---|---|
| i. | நாவல தொழிற்சாலை (அச்சுக்கல்) | 21.63 | 19.80 |
| ii. | மணல் கழுவும் தொழிற்சாலை | 2.06 | (14.27) |
| iii. | நாவல தொழிற்சாலை (சீமெந்துக் கற்கள்) | (4.29) | (13.95) |
| iv. | நாவல வேலைத்தளம் | (3.16) | (4.75) |
| v. | கொட்டகல தொழிற்சாலை | (0.48) | (0.53) |
| vi. | அம்பாறை தொழிற்சாலை | (0.74) | (0.44) |
| vii. | மணல் பக்கற்றில் அடைக்கும் தொழிற்சாலை | - | (26.70) |
| viii. | ஹிங்குரன்கொட தொழிற்சாலை | (0.39) | (0.70) |
| ix. | திருகோணமலை தொழிற்சாலை | (0.92) | (0.91) |
| | ஒட்டுமொத்த பங்களிப்பு | 13.69 | (42.45) |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 2014/89/554 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா.4,555,193 பங்கு இலாபம் வெளியிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 7 வருடங்கள் கடந்துள்ள நிலையில் பங்கு இலாபத்தினை செலுத்த கம்பனி தவறியிருந்தது. | அந்த காலத்தில் கம்பனி இலாபம் ஈட்டியதன் அடிப்படையில் அந்த பங்கு இலாபம் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் பணம் செலுத்துவதற்கு போதிய நிதி மூலங்கள் இல்லாதிருந்தமையால் தொடர்ச்சியாக இந்த பங்கு இலாபத்தினை செலுத்த முடியாதுள்ளது. நிதி நிலைமை நல்ல நிலைக்கு உள்ளானதன் பின்னர் இதனை செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | போதியளவு இலாபம் காணப்பட்டால் மற்றும் நட்டமடையாமை தொடர்பான சான்றிதழொன்று காணப்பட்டால் மாத்திரம் பங்கிலாபம் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன், அந்த பங்கிலாபங்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | 2014 மற்றும் 2019 ஆம் ஆண்டுகள் முதலாக இரண்டு கணக்குகள் விளைவற்றதாக காணப்பட்டதுடன், அந்த கணக்குகளின் மீதிகள் முறையே ரூபா 17,499 மற்றும் ரூபா 202,926 ஆக காணப்பட்டது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று இந்த இரண்டு கணக்குகளையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயலற்ற கணக்குகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (இ) | கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக கடந்த வருடத்தின் இறுதியில் உள்ளபடியாக காணப்பட்ட ரூபா 10.11 மில்லியனான வங்கி மேலதிகப்பற்று மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 17 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | செயற்படு மூலதனத்தின் பற்றாக்குறை காரணமாக ரூபா 12 மில்லியன் வரைய வங்கி மேலதிகப்பற்று ஏற்பட்டுள்ளது. | கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாக மேற்கொண்டு செயற்படு மூலதன தேவைப்பாட்டினை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என்பது. |
| (ஈ) | தாய் கம்பனிக்கு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நேரடி ஒப்பந்தமான மெத மூலன டீ.ஏ. ராஜபக்ஷ ஞாபகார்த்த நூதனசாலையில் சூரிய ஒளி பிறப்பாக்கி படலமொன்றை பொருத்தும் ஒப்பந்தத்திற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3.28 மில்லியனான ஒப்பந்தச் செலவினம் 2014 ஆம் ஆண்டு முதல் 2022 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தாய் கம்பனிக்கு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திலிருந்து ஒப்பந்தத்திற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 3.28 மில்லியன் எங்களால் கோரி கடிதங்கள் சில முன்வைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இந்த பெறுமதியை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சேவை வழங்குநரிடமிருந்து பெற வேண்டிய பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடல் மணல் பக்கற்றுக்களை உற்பத்தி செய்வதற்கு கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக முதலில் தேசிய அடிப்படையில் ஐந்து வழங்குநர்கள் ரூபா 142.03 மில்லியன் மற்றும் ரூபா 199.98 மில்லியனான கூறுவிலைகளை சமர்ப்பித்திருந்த போதிலும், விலைக்கேள்வி காப்பீட்டின் காலம் போதுமானதாக இல்லாதிருந்தமை, கடந்த 5 வருட காலப்பகுதியில் அதற்கு சமனான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படாமை, அந்த செயற்திட்டங்களுக்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற விடயங்களின் அடிப்படையில் அந்த விலைக்கேள்விகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் சர்வதேச அடிப்படையில் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்த போதிலும், விலைக்கேள்வி காப்பீட்டினை பெற்றுக்கொள்ளாது ரூபா 265.03 மில்லியனுக்கு வெளிநாட்டு வழங்குநர் ஒருவருக்கு ஒப்பந்தமானது உடன்படிக்கையொன்று இல்லாது 2018 செப்தம்பர் மாதத்தின் போது கையளிக்கப்பட்டிருந்ததுடன், செயலாற்றல் பிணையொன்று மற்றும் முற்பணக் காப்பீடொன்று பெற்றுக்கொள்ளாதுமுற்பணமாக ரூபா 3.32 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவைகளுக்கு முரணாக மற்றும் அதிக கூறுவிலைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பில் தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவின் மற்றும் இலஞ்ச மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுட்ன, அந்த நிறுவனங்களில் இந்த முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டவாறு உள்ளது. | நிலவும் சட்டங்கள் மற்றும் விதிகளை மீறி செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பில் சுயாதீனமான பரசோதனையொன்று உள்ளக ரீதியாகவும் நடைமுறைப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடல் மணல் பக்கற்றில் அடைத்து விற்பனை செய்யும் செயற்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 17.80 மில்லியன் கொள்வனவு செய்யப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 9.79 மில்லியனான மணல் பொதியிடல் இயந்திரம் | எம்மால் ரூபா 17.80 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மணல் பக்கற்றில் அடைக்கும் இயந்திரத்தினை கைத்தவரிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த இயந்திரத்தை | பெறுகைகள் வழிகாட்டிகளுக்கு இணங்க செயற்பட்டு விளைவற்ற சொத்துக்களை கைத்தவரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு முழுவதும் பயன்படுத்தப்படாது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது. | பெறுமதியிடுவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய முறையான பெறுகை நடைமுறையின் ஊடாக இந்த இயந்திரத்தினை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

### 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டியின் 2006-4. 2.1(இ) பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கம்பனியால் ரூபா 2.22 மில்லியன் மூலதன செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த கொள்வனவுகளுக்காக அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்களின் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், 2022 ஆம் ஆண்டின் போது பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படும். | வருடாந்த பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | அரச பெறுகைகள் வழிகாட்டியின் 2006-1.2.1 பிரிவின் பிரகாரம், கடல் மணலை பக்கற்றில் அடைத்து விற்பனை செய்வதற்காக கம்பனியால் 2019 ஆம் ஆண்டின் போது ஒவ்வொன்றும் ரூபா 27.58 (அனைத்து வரிகளும் உள்ளடங்களாக) படியாக ரூபா 13.79 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த Woven polypropylene பைகள் 500,000 இல் கடல் மணல் பக்கற்றில் அடைக்கும் செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்ட காரணத்தால் எஞ்சிய பைகள் 2021 யூன் மாதம் 12 ஆந் திகதி நாவல தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டிருந்தது. அந்த பைகளில் ரூபா 12.04 மில்லியனான கிரயமுடைய 436,406 பைகள் எதுவித அரச பெறுகை நடைமுறையையும் பின்பற்றாது 2022 யூலை மாதம் ரூபா 5.88 மில்லியனுக்கு விற்பனை செய்வதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக கம்பனிக்கு ரூபா 6.16 மில்லியனான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | இது தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் விசாரணையொன்றினை மேற்கொண்டு அறிக்கையிட்டுள்ளதுடன், பெறுகை நடைமுறையின்றி செயற்பட்டமை தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து விடயங்களை கோரி அவர்களுக்கு எதிராக செயற்படுவதற்கு இதுவரையிலும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியால் ஹொரண வாரச் சந்தையை நிர்மாணிக்கும் பணிக்காக 2014 ஆம் ஆண்டின் போது உப ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட ரூபா 4.65 மில்லியனான தொழிலாரம்பிப்பு முற்பணத் தொகையில், 2015 செப்தம்பர் மாதமளவில் ரூபா 2.65 மில்லியன் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எஞ்சிய ரூபா 2 மில்லியன் ொதகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பந்திக்கமைய முற்பணக் காப்பீடொன்றினை பெற்றுக்கொள்ளாது உப ஒப்பந்ததாரருக்கு முற்பணம் வழங்கப்பட்ட காரணத்தால் கம்பனிக்கு இந்த முற்பணத்தை அறவீடு செய்ய முடியாதிருந்ததுடன், கம்பனியால் உப ஒப்பந்ததாரருடன் முறையான ஒப்பந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | கம்பனியால் ஹொரண வாரச் சந்தையை நிர்மாணிக்கும் பணிக்காக 2014 ஆம் ஆண்டின் போது சர்ஜ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக வழங்கப்பட்ட ரூபா 4.65 மில்லியன் சுழற்சி முற்பணத் தொகையில் ரூபா 2.65 மில்லியன் அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய ரூபா 2 மில்லியனை அறவிடுவதற்காக அவருக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவித்து உரிய தகவல்களை பெற்று எதிர்காலத்தில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | அரச பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் தொழிலாரம்பிப்பு முற்பணம் வழங்கும் போது முற்பணக் காப்பீடொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மற்றும் அந்த பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |
| (ஆ) | ரூபா 56.62 மில்லியன் பெறுமதியான 2 ஒப்பந்தங்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தினை கடந்திருந்த போதிலும், சேவை வழங்குநர்களுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிவும் பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021.12.31 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தப் பெறுமதி 75% ஆக காணப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டினுள் நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் எமது பிரிவும் குறுகிய காலம் மூடுவதற்கு நேர்ந்தமையால் மற்றும் ஊழியர்கள் நோய்வாய்ப்பட்ட காரணத்தால் பற்றுச்சீட்டுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. | செய்வேலைக்காக உடன்படிக்கையின் பிரகாரம் தாமதமின்றி அளவீடுகளை பெற்று சேவை பெறுநருக்கு பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டும் என்பது. |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகாரசபையால் 2018 மே 15 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த மற்றும் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 10.69 மில்லியனான இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான காணியொன்றை அபிவிருத்தி செய்யும் ஒப்பந்தத்தின் பணிகள் 2019 ஆம் ஆண்டு முதல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 21 ஆந் திகதி நகர | ஒப்பந்தத்தினை கையளித்த கம்பனிக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் உடைத்து அகற்றுவதற்கு மற்றும் வேலைத்தளத்தினை சுத்தப்படுத்தி வழங்குவதற்கு காலம் கடந்தமையால் இவ்வாறு இடம்பெற்றுள்ளது. நிர்மாணிப்பதற்குள்ள (எஞ்சிய) பணிகளுக்காக பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உப ஒப்பந்ததாரரின் அலுவலகங்களின் நியமம் மற்றும் இலக்குகள் தொடர்பில் கம்பனியால் உரிய கண்காணிப்பு மற்றும் பின்தொடர்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி அதிகாரசபையின் கடிதத்தில் ஒப்பந்தத்தின் கீழ் அத்திகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆரம்ப மட்டத்திலான வேலைப் பகுதிகளும் உரிய நியமத்துடன் நிறைவேற்றப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக கம்பனியால் 2018 திசெம்பர் 10 ஆந் திகதி சேவை வழங்குநருக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 6.61 மில்லியனான முதலாவது செயன்முன்னேற்ற பட்டியலும் (Progress Claim) சேவை வழங்குநரால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சான்றுபடுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கைவிடப்பட்ட ஒப்பந்தத்தின் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் முறையே 21 சதவீதம் மற்றும் 60 சதவீதமாக காணப்பட்டது. | | |
| (ஈ) | உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டிய ஒப்பந்தப் பெறுமதி ரூபா 19.89 மில்லியனான பேராதெனிய பல்கலைக்கழகத்திற்கு மண்டபமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பௌதீக செயன்முன்னேற்றம் 75 சதவீதமாக காணப்பட்ட போதிலும், நிதி செயன்முன்னேற்றம் 37 சதவீதம் மாத்திரமாக காணப்பட்டது. | வேலைத்தளத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், உள்ளகப் பிரச்சினைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் மூலம் பற்றுச்சீட்டுகளை சான்றுபடுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஏற்பட்டுள்ளது. பணிகள் நிறைவு செய்யப்பட்டு 2021 செப்தம்பர் மாதத்தில் பட்டியல்களை சமர்ப்பித்தல் இடம்பெற்றுள்ளது. | செய்வேலைகளுக்காக உரிய காலத்தில் பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. |
| (உ) | ஒப்பந்தப் பெறுமதி ரூபா 13.90 மில்லியனான முண்டிகல ஆரணியத்தின் இருமாடிக் கட்டிடமொன்றினை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2016 யூலை 20 ஆந் திகதி கம்பனியால் கையேற்கப்பட்டிருந்தது. அது 120 நாட்களினுள் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஒப்பந்தத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் பௌதீக செயன்முன்னேற்றம் 40 சதவீதமும் நிதிச் செயன்முன்னேற்றம் 32 சதவீதமாகவும் | ஒப்பந்தப் பணிகள் முடிவுறுத்தப்பட்டு, மேலதிக பணிகளுக்காகவும் கோரிக்கை வீடுத்து பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தத்தினை கையளித்த கம்பனியினால் பட்டியல்கள் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும்,<br>• Mutual Termination ஒன்றுக்கு செல்லல்.<br>• எஞ்சிய பொருட்களை | கம்பனிக்கு நேர்ந்துள்ள செலவினத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. நீண்ட காலம் கடந்துள்ளமையால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான இந்த ஒப்பந்தத்தினால் கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 4.79 மில்லியனாக கணிப்பிடப்பட்டிருந்தது. கம்பனி சேவை வழங்குநர் நிறுவனத்துடன் முறையான உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட்டிராத போது உரிய முறையில் ஒப்பந்தத்தின் கீழ் பணிகளை நிறைவேற்றுவதற்கு தாக்கமளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | பதிவேட்டுக்கு உட்படுத்தல் இடம்பெற்றது. | |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கம்பனியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 128 அக இருந்ததுடன் அத் திகதியில் உள்ளபடியான பதவியணி 87 ஆக இருந்தமையால் அத் திகதியில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 41 ஆகும். அவ்வாறே மிகைகளின் எண்ணிக்கை 18 ஆகும். 41 வெற்றிடங்களில் ஊடக முகாமைத்துவ மட்டத்தழலனா பொறியியலாளர், வழங்கல் முகாமையாளர் மற்றும் அளவிடை மதிப்பீட்டாளர் ஆகிய 07 பதவிகள் 07 வருடங்களாக வெற்றிடமாக காணப்பட்டதுடன், 18 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும் 12 தொழிலாளர் பதவிகளும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வெற்றிடமாக காணப்பட்டது. | இதுவரையிலும் கணக்காளர் பதவி நிரப்பப்பட்டுள்ளது. இடை முகாமைத்துவ மட்டத்திலான 06 வெற்றிடங்கள் தற்போதும் வெற்றிடமாக உள்ளது. அவசர வெற்றிடங்கள் சிலவற்றை நிரப்புவதற்காக பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 04/2022 இன் பிரகாரம், நிதி அமைச்சிடம் எழுத்துமூல அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. 18 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் 13 வெற்றிடங்கள் வரையிலும், 10 மிகையான முகாமைத்துவ உதவியாளர் பதவிகளை 02 வரையிலும் குறைக்கப்பட்டுள்ளது. கீழ் மட்ட முகாமைத்துவத்தின் 04 வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை. ஒட்டுமொத்த தொழிலாளர் வெற்றிடங்கள் 12 இதுவரை நிரப்பப்படவில்லை. | கம்பனியின் பதவி வெற்றிடங்களை துரிதமாக நிரப்ப வேண்டியதுடன் பதவியணியின் நிலைமை தேவைக்கேற்ப அங்கீகாரத்துடன் நடாத்திச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனியினால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பியின் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு விபரங்கள் அந்த நடைமுறையினுள் உள்ளடக்கப்படவில்லை. இவற்றுள் பொது முகாமையாளர் பதவி தொடர்பில் மீளாய்வாண்டின் போது கொள்கை ரீதியான தீர்மானமொன்றினை எடுக்கப்பட உள்ளதுடன், கடந்த வருடத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதிலாக குறிப்பிடப்பட்ட போதிலும், அது தொடர்பில் எந்த தீர்மானமும் 2022 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்படவில்லை. | ரெட்கோ பொது முகாமையாளரின் அறிவுரைக்கமைய SOP மற்றும் SOR மீளாய்வுக் குழுவொன்று நியமிக்கப்படுவதுடன், இந்த முதலாவது குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் பதவிகள் தொடர்பில் ஆட்சேர்ப்பு விபரங்கள் SOP பதிவேட்டிற்கு உட்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. | கம்பனியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை தயாரித்தல் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைக்கு மிகவும் முக்கியமானது ஆகும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கம்பனியால் 2021 ஆம் ஆண்டுக்குரிய நிதிக்கூற்றுக்கள் 2022 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 03 மாதங்கள் தாமதித்து அதாவது 2022 யூன் 03 ஆந் திகதி நிதிக்கூற்றுக்கள் முறையாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நாட்டின் ஸ்திரமின்மை காரணமாக தாமதம் ஏற்பட்டாலும், குறித்த காலக்கெடுவுக்குள் காலதாமதமின்றி நிதிநிலை அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. | பொது திறைசேரியின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் கம்பனியின் ஒவ்வொரு முகாமைத்துவ மட்டத்திலுமான உத்தியோகத்தர்களின் பொறுப்புகள் | நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக மீளாய்வாண்டின் போது கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய உரிய காலப்பகுதியில் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்து அதற்கமைய |

| | | |
|---|---|---|
| தனித்தனியாக இனங்காணப்பட்டு, அவர்களால் ஆண்டினுள் அடைந்துகொள்ளக் கூடிய இலக்குகள் மற்றும் நோக்கங்களும் தெளிவாக தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் மீளாய்வாண்டுக்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. சுற்றறிக்கையின் பிரிவு இலக்கம் 5.1.3 இன் பிரகாரம், நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கூட்டிணைந்த திட்டம் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனியால் மீளாய்வாண்டுக்குரிய செயல்நடவடிக்கை திட்டம் உள்ளடக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபைக்கு வருடம் ஆரம்பித்து 06 மாதங்களின் பின்னர் அதாவது 2021 யூன் 11 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது. |

**4.3 பணிப்பாளர் சபைக் கூட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.2 மற்றும் 4.2.5 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியின் செயலாற்றல் அறிக்கை, செயற்பாட்டு அறிக்கைகள், காசுப்பாய்ச்சல் கூற்று, திரவத்தன்மை மற்றும் கடன் பெறல், பெறுகை நடவடிக்கைகள், மனிதவளம், கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வு, இருப்பு காலப் பகுப்பாய்வுகள் மற்றும் கம்பனியின் ஒவ்வொரு பிரிவுகளினதும் செயலாற்றல் தனித்தனியாக பணிப்பாளர் சபையினால் மாதாந்தம் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கம்பனியால் 05 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், மேற்படி மாதாந்த மீளாய்வுகள் அல்லது மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவும் ஸ்திரமின்மை காரணமாக, மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் 05 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மட்டுமே நடைபெற்றன. இது தவிர, கம்பனியின் செயலாற்றல் அறிக்கை, செயற்பாட்டு அறிக்கைகள், காசுப்பாய்ச்சல் கூற்று, திரவத்தன்மை மற்றும் கடன் பெறல், பெறுகை நடவடிக்கைகள், மனிதவளம், கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வு, இருப்பு காலப் பகுப்பாய்வுகள் மற்றும் கம்பனியின் ஒவ்வொரு பிரிவுகளினதும் செயலாற்றல் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டது. | நிறுவனத்தின் நல்லாட்சிக்காக சுற்றறிக்கைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் கணக்காய்வு பணிகளுக்கு உள்ளக கணக்காய்வு பிரிவொன்றினை தாபித்திருக்காததுடன் கம்பனியின் தாய்க் கம்பனியான இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு கணக்காய்வு ஐயவினா மாத்தரம் வெளியிடப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கையின் இயலுமைக்கமைய அது போதுமானதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் பிரதி பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) இன் கண்காணிப்பின் கீழ் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் இருவரின் பங்களிப்புடன் உள்ளக கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டில் செயல்பாடுகள் இடைநிறுத்தப்பட்டதாலும், நாடு மூடப்பட்டதாலும், போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாலும் நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்தது. சரியான திட்டத்தின்படி, கணக்காய்வுப் பணிகள் 2022 ஆம் ஆண்டில் செய்யப்படும். | உள்ளக கட்டுப்பாட்டினை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளக கணக்காய்வு பலப்படுத்தப்பட வேண்டும். |